ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

06.02.2025

1. சோதி பலம் தந்த முருகா
சூட்சும வடிவம் தந்த வேலவா
ஆதி அந்தம் அனைத்துமாக
அரங்கன் என்னுள் கலந்த முருகா

2. முருகா யான் பெற்ற பேரின்பம்
முழுமைபட உலகோர் அடைய
குருவாக ஆறுமுக அரங்கன் யானும்
குருவார அருளாசியாக இனிதே

3. இனிதே குரோதி கலை திங்கள்
இயம்பிடுவேன் சதுர்வார ஆசிதனை
கனிவேலவன் சக்தியாக உரைப்பேன்
கருணைமிக்க பிரணவக் குடிலுக்கு வந்து

4. வந்துமே சரவண சோதியான
வள்ளல் என் முகம் கண்டு
சிந்தை மகிழ நாமசெபம் கூறி
சோதி பூசை வழிபாடு செய்து

5. செய்துமே குடிலின் அன்னதான
சிறப்பான அருளமுதை உண்ண
மெய்ஞானம் இலகுவாய் கிட்டும்
முருகனும் அரங்கனும் கலந்துள்ள

6. கலந்துள்ள சோதி வடிவான காட்சி
கண்டடைய வழிகள் பிறக்கும்
பலந்தான் அடைந்தோமென நிலை
பன்மடங்கு பெருகி நிற்கும்

7. நிற்குமே சத்து அசத்து என
நிலையாமை அழியாமை என
ஏற்பு கடந்த ஞானபலம் கூடி
எல்லாம் அவன் செயலே எனும்

8. எனும் பரிபக்குவம் கொண்ட
ஈடு இணையில்லா சரணாகதி
தானாக அரங்கன் என் வழி
தரணியோர்க்கு பெருகி நின்று

9. நின்றுமே என் மார்க்கம் சன்மார்க்கம்
நிலைத்திட உங்களுள் நிரம்பிட
நன்றான ஞானவான்களாக
ஞானிகளாகவே மாற்றங்கள் கண்டு

10. கண்டுமே அரங்கன் படைகளென
கலியுகம் எங்கிலும் நிரம்பிட
உண்டாகும் ஞானயுக மாற்றம்
உயர்வான அரங்கன் என் குடில் நோக்கி

11. நோக்கி தரும சேவைக்கென
நிதி உதவி செய்து வருக
ஆக்கமுடன் உடல் உழைப்பு தருக
அனைவருக்கும் அரங்கன் யான் அருள்புரிவேன்
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி